**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுகள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக குறிப்புக்கள் பொழிப்பாக்கி முக்கிய கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர்31ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின்தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதெனு முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினைகலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில்நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க முகவராண்மை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் பங்களிப்புத் தொகை, சுழற்சி நிதியம் மற்றும் மக்கள் வங்கி உதவி சம்பந்தமாக கணக்கீட்டுக் கொள்கை மற்றும் விபரமான குறிப்புக்கள் நிதிக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஐந்தொகை ஒப்பீட்டினுள் இது தொடர்பாக குறிப்பிடப் பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டிலிருந்து கணக்கீட்டு கொள்கை மற்றும் விபரமான குறிப்புகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களின் படி செயல்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2 இன் படி, சென்ற ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு வங்கி உதவிக் கணக்கில் ரூபா 306,498 க்கான மிகுதி மீளாய்வாண்டில் ஒன்று திரட்டப்பட்ட மிகையிகைக்கு மாற்றப்பட்டது. இச் சீராக்கல் காசு பாய்ச்சல் கூற்றிற்கு தாக்கம் இல்லாவிடினும் அது நிதித் தொழிற்பாட்டின் கீழ் காசு பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் படி நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்கீட்டு நியமத்தின் படி செயல்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இல் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பயன்தரு வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 5,481,300 இற்கான நடைமுறை அல்லாத சொத்துக்கள் முற்றாக பெறுமானத்தேய்வு செய்திருந்த போதிலும், நிதியத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் படி திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் படி சம்பந்தப்பட்ட சொத்துக்களை இனங்கண்டு கொண்டதன் பின் மீள் மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் படி செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் கூட்டுறவு சங்கங்களிலிருந்து ரூபா 26,854,335 இற்கான பங்களிப்பு காசாக பெறப்பட்ட போதும், அதனைப் பெற வேண்டிய பங்களிப்பு காசு கணக்கில் இடும் போது ரூபா 26,654,336 ஆக குறிக்கப்பட்டதனால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பெற வேண்டிய பங்களிப்பு காசு மிகுதி ரூபா 200,000 மிகையாக காட்டப்பட்டிருந்தது. | வரையறுக்கப்பட்ட கூட்டுறவு விற்பனை சங்கத்தினால் பங்களிப்புப் பணமாக பெறப்பட்ட இலக்கம் 282329 கொண்ட மற்றும் ரூபா 200,000 இற்கான காசோலை அட்டவணையில் குறிக்கும் போது ஏற்பட்ட தவறு காரணமாக இத் தவறுதல் நேர்துள்ளதால் மீளாய்வாண்டில் இதை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் பங்களிப்பு காசு வருமானம் ரூபா 101,413,349 ஆக வேண்டியிருந்த போதிலும், வருமான செலவினக் கூற்றில் அது ரூபா 101,612,349 ஆக குறிப்பிடப்பட்டிருந்தமையினால் வருட மிகை ரூபா 200,000 அதிகமாக காட்டப்பட்டது. | வரையறுக்கப்பட்ட விற்பனை சங்கத்திலிருந்து பெறப்பட்ட பங்களிப்புக் காசோலை இலக்கம் 282329 மற்றும் ரூபா 200,000 வாக அட்டவணையில் தவறுதலாக குறிப்பிடப்பட்டமை யினால் இத்தவறுதல் ஏற்பட்டிருப்பதனால் மீளாய்வாண்டில் இதனை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தவறின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| வியடம் | காசு | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| கூட்டுறவு சங்கக் கடன் | 47,164,884 | மிகுதியினை உறுதிப்படுத்தல் | பல வருடங்கள் பழமை வாய்ந்த கடன் மிகுதிகள் | மிகுதி உறுதிப்பாட்டினை பெற்றுக் |
| கடன் பெற்றுக் | 5,439,905 | மிகுதியினை | ஆனபடியால் | கொள்வதற்கான |

| | | | |
|---|---|---|---|
| கொடுத்தல் ஊவா மாகாணம் | உறுதிப்படுத்துதல் | செயற்படும் சங்கங்களை இனங்கண்டதன் பின் மிகுதிக்கான உறுதிப்பாட்டினை துரிதமாக பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள 1997 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 2,666,000 கூட்டுறவு பாடசாலைக்கான கடன் 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 1,999,600 தொகைக்கான செயலாற்றுகை முற்பணம் மற்றும் ரூபா 1,184,000 தொகைக்கான நீதிமன்ற நட்டஈடு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1997 இல் பொல்கொள்ள கூட்டுறவு சாலைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கடன் மற்றும் செயலாற்றுகை முற்பண விபரங்கள் கண்டுபிடித்ததன் பின் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். பெற வேண்டிய நீதிமன்ற நட்டஈட்டு தொகையான ரூபா 1,184,000, அதில் நூற்றுக்கு 50 அங்கத்தவர்களிடமிருந்தும் மிகுதி நூற்றுக்கு 50 பொதுக் கணக்கிலிருந்தும் அறவிடுவதற்கு தீர்மானமாகி உள்ளது. | கடன் மிகுதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்து 59 கூட்டுறவு சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் தொகையில் 2019 சனவரி 01 ஆந் திகதிக்கு உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 34,303,931 க்கான மிகுதியில் மீளாய்வாண்டில் எவ்வித கடன் தவணைப் பணமும் அறவாகி இருக்கவில்லை. இக்கடன் மிகுதிகள் 07 வருடம் முதல் 55 வருடம் வரையிலான காலமாக இருந்து வருகின்றது. | இம்மாகாணங்களில் அறவிட வேண்டியுள்ள நிலுவை பற்றி மாகாண ஆணையாளர் சம்மேளனத்தில் தொடர்ந்து மாகாண ஆணையாளர்களினை அறிவுறுத்தப்பட்டது. மேலும், அதிகமான இக்கடன் நிலுவைகள் சுமார் 20 வருடங்கள் பழமையான கடன் நிலுவையான படியால் விரங்களை கண்டுபிடிப்பது கடினமாக உள்ளது. எவ்வாறாயினும், இக்கடன் நிலுவைகளை மாகாண ரீதியில் அறவிடுவதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் மிகுதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

1.7 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய இலக்கம் PS/SP/SB/21/2018 மற்றும் 2015 செப்டம்பர் 25 ஆந் திகதிய இலக்கம் SP/SB/07/15 கொண்ட சனாதிபதி செயலாளர் அலுவலக சுற்றறிக்கை | கூட்டுறவு சங்கத்தின் முன்னேற்ற பயணத்தினை சீர் செய்வதற்காக இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டு ஹோட்டல்களில் நடாத்துவதற்காக மொத்தம் ரூபா 3,435,114 நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டது. | இந்நிகழ்ச்சித்திட்ட தொடரின் முதல் செயலமர்வினை நடாத்துவதற்கு தேவையான இணைப்பு வேலைகள் தேசிய கூட்டுறவு சபைக்கு கையளிக்கப்பட்டதுடன், நிலையத்தினை தெரிவு செய்வதும் தேசிய கூட்டுறவு சபையினால் செய்யப்பட்டது. இரண்டாவது செயலமர்வு பாதுகாப்பு பிரிவினால் நடாத்தப்படும் Laya Leisure நிலையத்தில் நடாத்தப்பட்டதுடன் அவ்விடம் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டது. | சுற்றறிக்கைக்கு அமைவாக செயல்பட வேண்டியமை. |

2. **நிதி மீளாய்வு**

2.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 92,070,503 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு இணங்களாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,742,511 ஆனதால் முன்னைய ஆண்டிற்கு நேரொப்பான மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 72,327,992 இற்கான வளர்ச்சியொன்று காணப்பட்டது. பங்களிப்புத் தொகை வருமானம் ரூபா 74,599,170 வினால் அதிகரித்திருந்தமை மேற்படி வளர்ச்சியின் மீது முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1974 சனவரி 10 ஆந் திகதிய இலக்கம் 93/5 கொண்ட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு ஒழுங்கில் 43 ஆம் பிரிவின் படி ஒவ்வொர பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமும் தனது | சர்வதேச கூட்டுறவு தின விழா ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 02 ஆந் திகதி சனிக்கிழமை கூட்டுறவாளர்களினாலும் நிறைவு கூறப்படும். | கூட்டுறவு நிதியத்தின் பணம் கூட்டுறவு தளத்தின் முன்னேற்றத்திற்கு ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த தேறிய இலாபத்தில் நூற்றுக்கு 10 இக்கு மேற்படாத மற்றும் ரூபா 05 க்கு குறையாத தொகையினை பங்களிப்புப் பணமாக நிதியத்திற்கு செலுத்தல் வேண்டும். அந் நிதியம் கூட்டுறவுக் கல்வி, பரப்புதல் மற்றும் விளம்பர வேலைகள், கூட்டுறவு சங்கங்களின் முகாமைத்துவ வினைத்திறனினை மேம்படுத்துதல் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு உதவுதல் ஆகியவற்றிற்கு ஈடுபடுத்த முடியுமென உதவுதல் ஆகியவற்றிற்கு ஈடுபடுத்த முடியுமென காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நிதியத்திற்கான கூட்டுறவு சங்கங்களின் பங்களிப்பு ரூபா 101,412,349 ஆக இருந்ததுடன் நிதியத்தின் மொத்த செலவினம் ரூபா 32,812,937 ஆனது இச்செலவில் கூட்டுறவு கல்வி பரப்புதல் மற்றும் விளம்பர செயற்பாடுகளுக்காக ரூபா 15,582,638 வகிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் நூற்றுக்கு 82 அதாவது ரூபா 12,836,589 கூட்டுறவு தின விழாவின் மற்றும் கூட்டுறவு இலக்கத்தின் முன்னேற்றப் பயண நிகழ்ச்சித் திட்டத்தின் விருந்துபசாரச் செலவு, பயணச் செலவு, மேலதிக நேர மற்றும் ஏனைய செலவுகளுக்கு ஆகும். | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் சகல கூட்டுறவு நிலையங்களினதும் கேந்திர நிலையமாகையினால் இவ்விழாவினை தேசிய மட்டத்தில் நினைவு கூறுகையில் கூடிய பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், 1972 இலக்கம் 05 கொண்ட கூட்டுறவு சங்க சட்ட மூலத்தின் ஒழுங்குத் தொடரில் 43(i) பிரிவுப் படி நிதியத்தின் முக்கிய நோக்கமாக கூட்டுறவு கல்வி, பரவலாக்கல் மற்றும் விளம்பர செயலினை காட்டப்பட்டுள்ளன. அதன் படி கணக்காய்வில் சுட்டிக் காட்டியுள்ள செலவினங்களை கட்டுப்பாட்டுடன் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | கூட்டுறவு சங்கங்களின் முகாமைத்துவ வினைத்திறனினை முன்னேற்றுவது மற்றம் கூட்டுறவு சங்கங்களுக்கு உதவுவதற்காக மீளாய்வாண்டில் நிதியத்தின் மொத்த செலவில் நூற்றுக்கு 10 ஆன ரூபா 3,192,427 மட்டும் செலவிடப்பட்டிருந்தது. | கூட்டுறவு சங்கங்களின் வினைத்திறனினை மேம்படுத்துவதற்கான தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு மாத்திரம் கூட்டுறவு நிதியத்தின் பங்களிப்பினை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | கூட்டுறவு நிதியத்தின் பணம் கூட்டுறவு தளத்தினது முன்னேற்றத்திற்கு ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 138,529,076 ஆன பெற வேண்டிய பங்களிப்புப் பண | ஏற்றுக் கொள்கின்றேன். மீளாய்வாண்டில் விடுக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைக்காக | கூட்டுறவு சங்கங்களின் கணக்காய்வுகள் உரிய தினத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | மீதியில் 05 வருடங்களுக்கு மேலாக பழமையான மீதி ரூபா 18.405,066 உம் 01 வருடம் முதல் 05 வருடம் இடைப்பட்ட காலத்தினுள் பெற வேண்டிய மீதி ரூபா 119,924,008 உம் இருந்தன. அவைகளின் 13 கூட்டுறவு சங்கங்களிலிருந்து 2015 வருடம் முதல் மீளாய்வாண்டு வரையிலும் எவ்வித பங்கிளப்புத் தொகையும் பெறப்படாதிருந்ததுடன் அச்சங்கங்களிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முழுத் தொகையான ரூபா 28.453,875 அறவாக இருந்தன. | அறவிடப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையினை துரிதமாக அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் நிலுவைப் பணமும் தவணை முறையிலாவது அறவிடப்படுவதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முடிக்கப்பட்டு பங்களிப்பு தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பெறவேண்டிய பங்களிப்புத் தொகையில் ரூபா 99,388,429 அதாவது நூற்றுக்கு 71 க்கான வீதம் வரையறுக்கப்பட்ட கல்வி சேவையிலுள்ளோரின் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அறவிடப்பட வேண்டி இருந்ததுடன் இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திலிருந்து ரூபா 2,370,319 அறவாக வேண்டி இருந்தது. 1972 இலக்கம் 05 கொண்ட கூட்டுறவு சங்க சட்டத்தின் மூலத்தின் 44(1) பிரிவின் படி கூட்டுறவு சங்க பதிவாளரினால் கூட்டுறவு சங்கங்களை கணக்காய்வு செய்ய வேண்டி இருந்த போதும் வரையறுக்கப்பட்ட கல்வி சேவையிள்ளோரின் கூட்டுறவு சங்கத்தின் மற்றம் இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தின் கணக்காய்வுகள் இறுதியாக முறையே 2014 மற்றும் 2011 வருடங்களில் செய்யப்பட்டிருந்தன. | வரையறுக்கப்பட்ட கல்விச் சேவகர் கூட்டுறவு சங்கத்தின் நிலுவை தொகைக்காக தலா ரூபா 500,000.000 செலுத்தப்பட்டு வருவதோடு, தற்போது விடுவிக்கப்பட்டிருக்கும் கணக்காய்வு அறிக்கைக்கான பங்களிப்பு தொகையினை ஒதுக்கலை ஒரே முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2020 வருட இரண்டாவது நான்கு மாதம் ஆகும் போது 2015 வருட கணக்காய்வினை முடித்து விட்டு கணக்காய்வு அறிக்கையை சங்கத்திற்கு விடுவிக்கப்பட்டள்ளது. மூன்றாவது நான்கு மாதம் ஆகும் போது 2016 ஆம் வருடத்திற்கான கணக்காய்வு முடிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின் இறுதி செயற்பாடுகள் செய்யப்பட்டு வருவதுடன் இதுவரை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. அவ்வாறே 2017 வருடக கணக்காய்வு செய்து கொண்டிருப்பதுடன் 2018 மற்றும் 2019 | கூட்டுறவு சங்கங்களின் கணக்காய்வுகள் உரிய தினத்தில் முடிக்கப்பட்டு பங்களிப்புத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருடங்களுக்கான கணக்குகளள் சமர்ப்பிக்கப்படவில்லை. வரையறுக்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தின் 2012 வருட கணக்காய்வு அறிக்கையை சங்கத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையினை திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதுடன், 2014 வருடத்திற்கான கணக்காய்வு முடிந்து கொண்டு இருக்கின்றது. 2015, 2016, 2017 மற்றும் 2018 வருடங்களுக்கான கணக்குகள் முன்வைக்கப்பட்டிருக்கின்ற போதும், அக் கணக்குகளில் தவறு இருப்பதாக உறுதியாகி உள்ளதுடன் முன்னைய கணக்காய்வுகள் முடியும் வரை கணக்காய்வாளரை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |
| (உ) | போரினால் சேதமடைந்த கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக 2015 ஆம் வருடத்தில் மன்னார் பிரதேசச் செயலகத்திற்கு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா28,000,000 வழங்கப்பட்டிருந்தது. இத் தொகையில் ரூபா 18,000,000 ஆனது 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தபோதிலும் அத்தொகை மீளாய்வாண்டின் போதே அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக 2019.08.28 ஆந் திகதி அமைச்சில் நடாத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழுவில் பேசப்பட்டமையுடன் அதன் தீர்மானத்தின்படி நிதியத்தின் தக்கவைக்கப்பட்ட ரூபா 18,000,000.00 ஆன தொகை மீண்டும் அமைச்சிற்கு மீள் நிரப்பப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அமைச்சினால் வழங்கப்பட்ட தொகை குறித்த நோக்கத்திற்கு குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் பயன்படுத்தப்பட வேண்டியமை. |